

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ரூ.4,500 கோடி மதிப்பீடு திட்டத்தின் மூலம் தமிழகத்தின் மிகச்சிறந்த பாசன திட்டமான பிஏபி பாசன வாய்க்காலை சீரமைத்திடுவீர் என கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முனைவர் ம. இராசேந்திரன் தலைமையில்

# தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ 15வது கூட்டம்!

## 48 சொற்கள் இறுதி செய்யப்பட்டன!

சென்னை, ஜுலை 20-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் “சொல் புதிது” திட்டத்தின் பதினைந்தாவது கூட்டம், தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், ம. இளங்கோவன், சிவ முருகேசன், விஜயலட்சுமி இராமசாமி, பாரதி பாலன், ஊடகவியலாளர்கள் மு. முருகேசன், ராஜ் கண்ணன், நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்வரும் 48 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

பிற மொழிச் சொல், தமிழ்ச் சொல் விவரம் வருமாறு:-

Premium villa plot- உயர்தரச் சீர்மனை, State of art–அதி நவீனம், Memflation- நினை வீக்கம்,Half bath room– பகுதிக் குளியலறை, Shower room– தூறல் அறை,

Washroom–கழுவு அறை, Powder room– ஒப்பனை அறை- கழிப்பறை, Sweat shirt–குளிர்தடை சட்டை, Bread slicer– ரொட்டி சீவி/ வெதுப்பிச்சீவி, Cheese slicer - வெண்ணெய்ச்சீவி, Concealer– மறைப்பூச்சு, Window washer–சாளரத் துடைப்பான்,

Lip liner– உதட்டு வரைகோல்,Room freshener- அறை மணப்பரப்பி,

Container set– கொள்கலன் தொகுப்பு,Kitchen set– சமைகலன் தொகுப்பு,

Dinner set- உண்கலன் தொகுப்பு,Dark chocolate -கரு மென்மிட்டாய் / கார் இன்னட்டு,

Home stay– இல்லத் தங்கல்,Sunscreen- கதிர்த் தடைக்காப்பு, Skin cream–

தோல் களிம்பு, Skin art- தோல் ஓவியம்,Skin glue- தோல் ஒட்டுப்பசை,

Prime slot– முதன்மை ஒதுக்கீடு, Research Fellowship- ஆய்வு உதவித்தொகை,

Water vending machine - நீர் வழங்கு இயந்திரம், Pickup van– குட்டி சரக்கு உந்து / அழை உந்து,Box office hit- பெருவெற்றி, Touch ID- தொடுகுறி,Face ID- முகக்குறி,Pattern– காப்புக்குறி,PIN- குறியீட்டு எண்,Container lorry– சரக்கு உந்து

Tanker lorry– நீர்ம சரக்கு உந்து, Pickup lorry– பெரும் சரக்கு உந்து / அழை சரக்குந்து, Tipper lorry– கொட்டு சரக்கு உந்து,Reward points -ஊக்கப் புள்ளிகள், Loyalty points –மதிப்பியல் புள்ளிகள். Score points ஈர்ப்புப் புள்ளிகள், Negative point- எதிர் மறைப் புள்ளி. Penalty point-தண்டப்புள்ளி, Service apartment- தங்கல் அடுக்ககம்,Unisex PG- பலர்பால் கட்டண விருந்தினர், Coliving–பகிர்வில்லம், Backpacker hostel - சிக்கனப் பயணி விடுதி / சுமையிலா பயணியர் விடுதி, Body art - உடல் ஓவியம், Bubblegum - மெல்லு மிட்டாய்)

ஆகிய 48 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

மாதவரம் 16, 19வது வட்டங்களில் ரூபாய் 3.50 கோடி செலவில் அமைக்கப்படவிருந்த

# மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தம் ரத்து செய்த த.வெ.க. அரசு!

## புழல் எம்.நாராயணன் கண்டனம்! – மழைக்கால நிவாரண மையக் கட்டிடம் தொடர்ந்து அமைக்க ஒப்பந்தம் கோர வலியுறுத்தல்!

மாதவரம், ஜுலை 20-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி வார்டு எண்கள் 16 மற்றும் 19 இல் பொதுமக்கள் மழைக்காலத்தில் சந்திக்கும் பேரிடர்களை களைய ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டப்படவிருந்த மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ததை நிறுத்தி வைத்து மீண்டும் பணிகளை துவக்க கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடம் திமுகவினர் மனு அளித்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16 மற்றும் 19வது வார்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவார்ந்த ஆலோசனையின் பேரில் 16 வது வார்டுக்கு உட்பட்ட கன்னியம்மன் பேட்டை, கன்னியம்மன் பேட்டை 2, சத்திரமேடு, கடப்பாக்கம், காமராஜபுரம், ஆண்டார்குப்பம், துவாரகா நகர், குளக்கரை, மணலி புதுநகர், எலந்தனூர், சடையங்குப்பம், பர்மா நகர், இருளர் காலனி ஆகிய பகுதிகளிலும் 19வது வட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மழைக்காலங்களில் பேரிடர்கள் ஏற்படும் நேரத்தில் மழை நீர் சூழ்ந்து பாதிக்கப்படும் மக்களை தங்க வைப்பதற்காகவும் அவர்களுக்கு என்று உணவு தயாரிப்பதற்காகவும் தனியாக மழை கால நிவாரண மையங்கள் அமைக்க ரூபாய் 3.50 கோடி செலவில் கட்டுமான பணிகள் துவங்கப்பட திராவிட மாடல் அரசில் ஒப்பந்தம் விடப்பட்டது.

பணிகள் துவங்குகின்ற நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால் பொதுமக்களின் நலனில் சிறிது மக்கள இல்லாமல் இப்பொழுது நடைபெறுகின்ற இந்த அரசு மேற்படி மழைக்கால நிவாரண மையத்திற்கான ஒப்பந்தங்களை ரத்து செய்துள்ளதாக அறிகிறோம். நாமும் விசாரித்த வகையில் திராவிட மாடல் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதால் அதை ரத்து செய்தது உண்மை என்று தெரிகிறது.

வார்டு 16 மற்றும் 19 பகுதிகளில் அடங்கிய கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள் ஏழ்மை நிலையிலும் தினசரி வேலை செய்து பிழைப்பு நடத்தக்கூடிய நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள். மழை வெள்ள காலங்களில் எப்பொழுதெல்லாம் இந்த பகுதி மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ அப்பொழுதெல்லாம் முன்னாள் முதலமைச்சராக இருந்த அன்பு அண்ணன் தளபதி அவர்கள் நேரடியாக வருகை தந்து இந்த பகுதி மக்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்து அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தார். மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மேற்படி பதினாறாவது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் நேரடியாக வருகை தந்து பேரிடர் காலங்களில் நிவாரண உதவிகளை வழங்கினார். அதன் அடிப்படையில் தான் மழைக்காலங்களில் பாதிக்கப்படும்போது அவர்களுக்கென உணவு தயாரிக்க குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மகளிர்கள் தங்குவதற்காக நிவாரணம் ஐயா கட்டிடங்கள் கட்ட உத்தரவிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட உடன் இப்பணிகளை துவங்காமல் ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ததை அறிந்து நாங்கள் அதிர்ச்சியுற்றோம். பொது மக்களின் நலனில் அக்கறையோடு துவங்கப்பட்ட இந்த திட்டம் முடக்கப்படுவதை திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு இந்த பணிகள் உடனடியாக துவங்க தாங்கள் ஆவண செய்ய வேண்டும் என்றும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளும் அவர்களின் தேவைகளும் மழைக்காலத்தில் பூர்த்தி ஆகும் என்பதையும் வலியுறுத்தி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அலுவலர் திரு பத்மநாபன் அவர்களை நேரில் சந்தித்து நிறுத்தப்பட்ட ஒப்பந்தத்தினை மீண்டும் ஒப்பந்தம் கோரி மழைக்கால நிவாரண மையங்கள் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவை அளித்தார். 19-வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், சடையங்குப்பம் முன்னால் கிராம செயலாளர் நைனியப்பன் உடன் இருந்தார். மேற்படி மனுவின் மீது நடவடிக்கை எடுத்து உடனடியாக பணிகள் துவங்க பரிசீலிப்பதாக மண்டல அலுவலர் உறுதி அளித்தார்.



கழக அரசின் தமிழ்ச்செம்மல் விருதினை பெற்ற தமிழறிஞரும், நகைச்சுவை நாவலருமான தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேல் அவர்களின் ”நினைவின் நிழல்கள் புத்தக அறிமுக விழா திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்றது. இதில் சங்க நிர்வாகிகள் எடையூர்.மணிமாறன், ஆசைத்தம்பி, ஆரூர்.அறிவு,யோகராஜன்,செந்தில், புலவர் கோமல் தமிழமுதன், எழுத்தாளர்கள் கீழை அ.கதிர்வேல், கமலாகந்தசாமி,குவளை கணேசன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர் .

# நாட்டின் மனச்சான்று எங்கே?

சமூகச் செயற்பாட்டாளர் சோனம் வாங்சுக் உண்ணா நிலைப் போராட்டத்தை ஒன்றிய ஏகாதிபத்திய அரசு பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட ஒடுக்குமுறையைப் பயன்படுத்தி உண்ணாநிலை களத்தில் அவரை கட்டாயப்படுத்தி மருத்துவமனையில் அனுமதித்து இருக்கிறது.

**இந்த உண்ணா நிலை களத்தைக்**

**கடந்த இரண்டு வாரங்களாகத்**

**தமிழ்ச் செய்தி ஊடகங்கள்**

**இருட்டடிப்புச் செய்தன.**

**கடந்த சில நாட்களில் கடைசிப் பக்கச் செய்தியாக வெளியிட்டுத் தங்களின் ஜனநாயக இருப்பைக் காட்டிக்கொண்டன.**

ஆனால் ஆங்கில இந்து நாளிதழ் ஜனநாயகத்தின் மனச் சான்றாகத் திகழ்ந்தது.

சோனம் செய்திகளை

முதன்மைப்படுத்தியது.

ஊடகத்தின் கடமையைச் செவ்வனே செய்தது.

கீழே உள்ள இரண்டு படங்களும் காலம் தோறும் நினைத்துப் போற்றக்கூடிய மிகச் சிறந்த கருத்தோவியங்கள்.

மனச் சான்று இல்லாமல் முழு அளவில்

ஆளும் கட்சிகளின் ஊது குழலாகவே

மாறிவிட்ட செய்தி ஊடகங்களின்

கொஞ்சம் மீதியிருக்கும் மனச் சான்றினை இந்த ஓவியங்கள் ஓரளவுக்கு உறுத்தியிருக்கலாம்.

இன்று ஜூலை ஆங்கில 18 இந்து நாளிதழின் முதல் பக்கத்தில்

எடுத்துக்கொண்ட கொள்கைக்காக

இன்னுயிரைத் தர விரும்பும்

சோனத்தின் சில வரிகள் நாட்டை

ஆள்வோரின் கவனத்திற்குச் சென்று இருக்க வேண்டும்.

இதனால் தான் சோனம் கட்டாயப்படுத்தி

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சோனம் கூறியது என்ன?

**“ஆம், நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்.**

**20 விழுக்காடு எனது உடல் சரிந்து விட்டது.**

**உடலில் கொழுப்புக்கள் கரைந்து தசைகளும் காணாமல் போய்விட்டன.**

**இதன் பிறகு எனது உடல் உறுப்புகள் போய்விடும்.**

**இறுதியில் எனது மூளை செயலிழந்து விடும்.**

**அதற்குரிய நேரம் இன்னும் வரவில்லை.”**



(Yes, I am still alive.Twenty percent of my body is gone. After fats , muscles are gone. After that, organs will go.Finally, the brain. The time has not come yet.)

திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உண்ணாநிலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**“உண்ணாது நோற்பார் பெரியர்**

**பிறர் சொல்லும்**

**இன்னாச் சொல் தோற்பாகின் பின்”**

**- குறள் 160**

**பிறர் சொல்லும் கொடிய சொற்களைப்**

**பொறுத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு**

**அடுத்த நிலையில் தான்,**

**உணவு உட்கொள்ளாமல் நோன்பு இருக்கும்**

**பெரியவர்கள் கூட வைத்து**

**எண்ணப்படுவார்கள். (நாவலர் உரை)**

கொண்ட கொள்கைக்காக ஒன்றிய அரசு பின்பற்றும் கொடியச் செயலைப்

பொறுத்துக் கொண்டு, தூற்றல்களைப் பொருட்படுத்தாமல் உண்ணாநிலையை மேற்கொண்டிருக்கும்

சோனம், வள்ளுவர் குறிப்பிட்ட இரண்டு

செயல்களிலும் இன்று முன்னவராக

உள்ளார் என்பதுதானே உண்மை.

பேராசிரியர்
மு.நாகநாதன்



ஒன்றிய அரசிடம் குவிந்து இருக்கும் அளவுக்கு மீறிய அதிகாரம் ஜனநாயகத்தைச் சீர்குலைத்துப் பல பெரியவர்களின் உயிரைப் பறித்து இருக்கிறதல்லவா!




ஆந்திரா பிரிவினையை வலியுறுத்தி உண்ணாநிலை மேற்கொண்ட பொட்டி சீறிராமலு,

தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும் என்று உண்ணாநிலை மேற்கொண்ட திரு.சங்கரலிங்கம் ஆகியோர்

இறந்த பின்பு தானே,

மொழி வழி மாநிலங்கள்1956 ஆம் ஆண்டிலும்,

1967 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா தமிழ்நாடு என்று பெயரிட்ட வரலாற்று நிகழ்வும் நடந்தேறின.

**ஒன்றிய பா.ஜ.க. சர்வாதிகார ஆட்சியும் மக்களால் தூக்கி எறியப்படும்.**

**நீட் தேர்வும் தூக்கி வீசப்படும்.**

**இளைஞர்கள் களம் வெல்லும்.**

**மக்கள் ஜனநாயகம் ஓங்கி ஒலிக்கும்!**

நரிக்குடி ஒன்றியக் குழு முன்னாள் தலைவர்

# எம்.ஆர்.சண்முகசுந்தரம் மறைவு!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு இரங்கல்!

விருதுநகர், ஜுலை 20-

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், திருச்சுழி தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியக் குழுத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றிய, RMS என்று அனைவராலும் அன்போடு அழைக்கபட்ட அண்ணன்ஆர். எம். சண்முகசுந்தரம் அவர்கள் இயற்கை எய்திய செய்தி மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது .



அவரது மறைவு அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், கழகத் தோழர்கள் என அவரை அறிந்த அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சி, 5 வது வார்டு சுயேட்சை கவுன்சிலர் அசாருதீன் தலைமையில் 25க்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் பூதப்பாண்டி பேரூராட்சி தலைவர், பூதப்பாண்டி பேரூர் கழக செயலாளர் ஆலிவர்தாஸ் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ.ஜவகர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.